பிற்படுத்தப்பட்டோர் நல இயக்ககம்
25 NOV 2021
சென்னை-5
சேப்பாக்கம்

**சுருக்கம்**

அறிவிப்புகள் – 2021 – 2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கை அறிவிப்புகள் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், சீர்மரபினர் மற்றும் சிறுபான்மையினர் நலன் – பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர், மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான கல்வி உதவித் தொகை திட்டங்களுக்கான வருமான வரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தி ஆணை வெளியிடப்படுகிறது.

---

**பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல (சிந2) த்துறை**

அரசாணை (நிலை) எண். 68

நாள் 18.11.2021
பிலவ, கார்த்திகை 2
திருவள்ளுவர் ஆண்டு 2052

படிக்கப்பட்டது :–

1. 2021–2022 ஆம் ஆண்டில் மாண்புமிகு அமைச்சர் அவர்களால், சட்டப்பேரவையில் வெளியிடப்பட்ட மானிய கோரிக்கையில் புதிய அறிவிப்பு எண்.6, நாள்.08.09.2021.
2. அரசு கடித எண்.1469438/சிந2/2021–1, நாள் 16.09.2021,
3. இயக்குநர் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அவர்களது ந.க.எண்.டி1/5642/2021, நாள். 16.09.2021

We have Arr dlar

**ஆணை:–**

2021–2022 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கையில் "கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் அதிக எண்ணிக்கையில் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியர் பயன்பெறும் வகையில் கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான வரம்பு 2 இலட்சம் ரூபாயிலிருந்து 2 இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயாக உயர்த்தப்படும்" என அறிவிப்பு வெளியிடப்பட்டது.

2. இதுதொடர்பான தற்போதைய மானியக் கோரிக்கை அறிவிப்பினை செயல்படுத்தும் விதமாக பெறப்பட்ட பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநரின் கருத்துருவில், மத்திய அரசின் கல்வி உதவித்தொகை திட்டத்திற்கான பெற்றோரது ஆண்டு வருமான உச்ச வரம்பு உயர்த்தப்பட்டுள்ளது போல, நமது மாநிலத்திலும் பள்ளிப்படிப்பு மற்றும் பள்ளி மேற்படிப்பு பயிலும்

பிற்படுத்தப்பட்ட, மிகப்பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் இன மாணவ / மாணவியருக்கு வழங்கப்படும் பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களுக்கான பெற்றோரது ஆண்டுவருமான உச்ச வரம்பினை ரூ.2,00,000/-லிருந்து ரூ.2,50,000/- ஆக உயர்த்தி வழங்கலாம் என்றும் இதன் மூலம் கூடுதலாக மாணவ / மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகை பெற வழிவகை கிடைக்கும் என்றும் இதனால் பள்ளி மேற்படிப்பு பயிலும் மாணவ / மாணவியர்களின் சதவீதம் உயரவும் பள்ளி மற்றும் கல்லூரி இடைநிற்றலை தவிர்க்கவும் வழிவகுக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

3. இக்கருத்துரு அரசால் நன்கு ஆய்வு செய்யப்பட்டு, கல்வி உதவித்தொகை திட்டத்தின் கீழ் பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் மாணவ, மாணவியருக்கான பல்வேறு கல்வி உதவித்தொகை திட்டங்களில் வரையறுக்கப்பட்டுள்ள பெற்றோரது ஆண்டு வருமான உச்ச வரம்பினை ரூ.2 இலட்சத்திலிருந்து ரூ.2 இலட்சத்து 50 ஆயிரமாக உயர்த்தி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ஆ.கார்த்திக்
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்

பிற்படுத்தப்பட்டோர் நல இயக்குநர், சென்னை- 5.
மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபினர் நல
ஆணையர், சென்னை-5.
மாநில கணக்காயர், சென்னை-18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 1), சென்னை-18. (பெயரில்).
மாநில கணக்காயர் (தணிக்கை- 2), சென்னை-18. (பெயரில்).
மாண்புமிகு முதலமைச்சர் அலுவலகம், சென்னை-9.
மாண்புமிகு அமைச்சர் (பிற்படுத்தப்பட்டோர் நலன்) அவர்களின்
சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை - 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை முதன்மைச் செயலாளர்
அவர்களின் முதன்மை தனிச்செயலர், சென்னை-9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நலத்துறை சிறப்புச் செயலாளர்
அவர்களின் நேர்முக எழுத்தர், சென்னை -9.
நிதி (பி.மி.பி மற்றும் சிந)த்துறை, சென்னை - 9.
பிற்படுத்தப்பட்டோர், மிகப்பிற்படுத்தப்பட்டோர் மற்றும்
சிறுபான்மையினர் நல(பிந3)த்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு / உபரி

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

18/11/2021
பிரிவு அலுவலர்.

18/11/2021